வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி - PW7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மாரியம்மாள் | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | பழனிச்சாமி | வயது | : | |
| கிராமம் | : | பச்சாபாளையம் மாகளியம்மன் நகர் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16.09.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 16.09.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலைக்கு சென்று வருகிறேன். பல்லடம் அஞ்சலகத்தில் ரூ. 900/- சேமித்து வந்தேன். நான் வந்து கேட்ட போது அந்த பணத்தை எடுத்து விட்டதாக சொன்னார்கள் என்னுடைய பாஸ் புத்தகத்தையும் வாங்கி வைத்துக்கொண்டார்கள்.தற்போது என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.த.சா.ஆ.34 கோப்பில் உள்ள பாஸ்புக் என்னுடையதுதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1)நான் பணம் கட்டினேனா அல்லது ஏஜென்ட்டுகள் பணத்தை கட்டினார்களா என்றால் நான் நேரடியாக பணம் கட்டினேன். பணம் எவ்வளவு குறைந்து போனது என்றால் 750 ரூபாய் குறைத்ததாக அதிகாரிகள் சொன்னார்கள். அஞ்சலக அதிகாரிகள் விசாரணை

முடித்து எனக்கு சேர வேண்டிய பணத்தை கொடுத்தார்களா என்றால் இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.09.16 18:26:33 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி - PW8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கலைச்செல்வி | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | மனோகரன் | வயது | : | |
| கிராமம் | : | மகாலட்சுமி நகர், மங்கலம் ரோடு | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16.09.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 16.09.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பல்லடம் அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். பல்லடம் அஞ்சலகத்தில் ரூ. சேமிப்பு கணக்கு வைத்து பணம் கட்டி வந்தேன். 19.01.1996 ல் என்னுடைய அஞ்சலக சேமிப்பு கணக்கில் ரூ.1800/- செலுத்திருந்தேன். எங்களுடைய சலானில்மட்டும் வரவு வைத்துவிட்டு அஞ்சலகத்தில் உள்ள கணக்கு புத்தகத்தில் வரவு வைக்கவில்லை. இது சம்மந்தமாக நான் அஞ்சலகத்தில் கேட்ட போது கணக்கு புத்தகத்தில் வரவு இல்லை என்று சொன்னார்கள். விசாரித்தபோது பணம் கையாடல் நடந்திருப்பதாக தெரியவந்தது. அதன்பிறகு அஞ்சலகத்தில் இருக்க கூடி ய அதிகாரிகள் திரும்பவும் என்னுடைய அஞ்சலக கணக்கில் ரூ7838.90/- வரவு வைத்து கொடுத்துவிட்டார்கள். .தற்போது என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.த.சா.ஆ.35 கோப்பில் உள்ள பாஸ்புக் என்னுடையதுதான். வழக்கு கோப்பில் உள்ள 19.01.1996 ஆம் தேதி அன்று நான் கொடுத்த

வாக்குமூலம் திருப்பூர் அஞ்சலக உதவு கண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தேன். அதில் பணம 7838.90/- சேர வேண்டும் சொல்லி இருந்தேன் நான் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

1) நான் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் பணம் கட்டுவதற்காக படிவங்களை நானோ அல்லது  எனது பள்ளி அலுவலக உதவியாளரோ எழுதுவது வழக்கம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உதவியாளரின் பெயர் என்ன என்றால் தற்போது ஞாபகம் இல்லை. பல உதவியாளர்கள் இருந்ததால் எனக்கு ஞாபகம் இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.09.16 18:26:45 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி - PW9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முருகன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சின்னான் | வயது | : | |
| கிராமம் | : | காந்திரோடு பல்லடம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16.09.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 16.09.2025.**

1) நான் திருப்பூர் டெலிபோன் அலுவலகத்தில் எழுத்தராக பணிபுரிந்து ஓய்வுபெற்று மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். பல்லடம் அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்து பணம் செலுத்தி மற்றும் எடுத்து வந்தேன். 1996 ஆம் ஆண்டு பல்லடம் அஞ்சலக கணக்கில் பணம் கையாடல் நடந்ததாக கேள்விப்பட்டு என்னுடைய கணக்கை சரிபார்தேன் அதில் என்னுடைய பாஸ்புக்கில் என்டிரி வைக்கப்பட்டிருந்தது பல்லடம் அஞ்சலக அலுவலக பதிவுகளில் என்டிரி செய்யாமல் இருந்ததை தெரிந்துக்கொண்டேன். எனது சேமிப்பு கணக்கில் எவ்வளவு பணம் குறைந்தது என்று வெகு நாள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு வர வேண்டிய தொகையை பின்னர் அஞ்சலகத்தில் இருந்து கொடுத்துவிட்டார்கள். சலானை காண்பித்து அதில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்று கேட்டார்கள் அது என்னுடையது இல்லை என்று கூறினேன். இது சம்மந்தமாக திருப்பூர் உதவி உட்கோட்ட ஆய்வாளர் முன்னிலையில் 14.02.1996 அன்று எழுதிக்கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம்

காட்டப்படும் ஏற்கனவே அ.த.சா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) நானே நேரடியாக சென்று பணம் செலுத்தினேனா என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.09.16 18:26:54 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி - PW10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சங்கர் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | தங்கவேல் | வயது | : | |
| கிராமம் | : | பட்டேல் வீதி | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16.09.2025.

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 16.09.2025.**

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கம்பெனியில் வேலை வருகிறேன். பல்லடம் அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்து பணம் செலுத்தி மற்றும் எடுத்து வந்தேன்.05.01.1996 எனது அஞ்சலக கணக்கில் ரூ.3000 /- செலுத்தி வரவு வைத்து வந்தேன். அதன்பிறகு 15.02.1996 ஆம் தேதி அஞ்சலகத்தில் சென்று விசாரித்தபோது அஞ்சலகத்தில் வேலை செய்யும் நபர் எனது பணத்தை கையாடல் செய்ததாக சொன்னார்கள். என்னுடைய பாஸ்புக்கை பெற்றுக்கொண்டார்கள். அஞ்சலகத்தில் இருந்து எனக்கு சேர வேண்டிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார்கள். இது சம்மந்தமாக அஞ்சலக உட்கோட்ட ஆய்வாளர் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தேன்.. அஞ்சலக கோப்பு ஏற்கனவே அ.த.சா.ஆ.47 குறியீடு செய்யப்பட்டுள்ளளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) என்னை விசாரித்து வாக்குமூலம் கொடுத்தபோது எனக்கு வயது 16 என்றால்

சரிதான். எனது பெயரில் எனது அப்பா தங்கவேல் கணக்கு தொடங்கி பணம் போட்டு பணம் எடுத்து வந்தார் என்றால் சரிதான். என்னை விசாரிக்கும் போது என் அப்பா கூட இருந்தாரா என்றால் வீட்டில் இருந்தார். என் அப்பாவை அஞ்சலக அதிகாரிகள் விசாரித்தார்களா என்றால் இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.09.16 18:27:06 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.